குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

ம.சா.1 எம்.சி. எண்.05/2019

2023–ம் ஆண்டு ஜீலை 21–ம் வெள்ளிக்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 1–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. சுகுனா | ஜாதி | |
| கணவர் பெயர் | கண்ணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 04.35 மணி,

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

1. எனக்கு குழந்தை பிறந்து 7 நாட்களுக்கு பிறகு மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்தேன். குழந்தை பிறந்த பிறகு சுமார் 4,5 முறை என் வீட்டிற்கு வந்து என்னை பார்த்தார். சுமார் 9 மாதங்கள் கழித்து நான் பெற்றோர் வீட்டில் இருந்து எனது கணவர் வீட்டிற்கு சென்றேன். ஒரு மாதம் காலம் எனது கணவர் வீட்டில் வசித்து விட்டு எனது வீட்டிற்கு திரும்பி வந்து விட்டேன். நான் எதிர்மனுதாரர் வீட்டில் வசித்த போது கரையான் மருந்தை தின்று தற்கொலை செய்வதாக எதிர்மனுதாரரை மிரட்டினேன் என்றால் சரியல்ல.

2. எனது கணவர் வீட்டில் இருந்து பிரிந்து நான் வந்த பிறகு இதுநாள் வரை நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு செல்லவில்லை. நானும், எதிர்மனுதாரரும் பிரிய முடிவு எடுத்து நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் 28.07.2018–ம் தேதி பஞ்சாயத்து முச்சலிக்கா எழுதி பிரிந்து விட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்து முச்சலிக்காவில் நான் எதிர்மனுதாரரிடம் இருந்து பிரிந்து வாழ்வதாக ஒப்பு கொண்டு கையெழுத்து இட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3. 26.07.2018– ம் தேதி மதியம் 1 மணி அளவில் எனது தந்தை அடையாளம் தெரியாத இரண்டு நபர்களுடன் சென்று எதிர்மனுதாரரை வரதட்சணை கேட்டதாக சொல்லி வழக்கு கொடுத்து எதிர்மனுதாரரையும், அவரது பெற்றோரையும் உள்ளே

தள்ளிவிடுவதாக என்று மிரட்டினார் என்றால் சரியல்ல. அதனால் எதிர்மனுதாரர் என் மீதும், எனது பெற்றோர் மீதும் மகுடஞ்சாவடி காவல்நிலையம், சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலையம், காவல் துணைகண்காணிப்பாளர் சங்ககிரி, காவல் கண்காணிப்பாளர், சேலம் ஆகியோரிடம் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

4. பஞ்சாயத்தாரர்கள் முன்னிலையில் நானும், எதிர்மனுதாரரும் பிரிந்து விடுவதாக ஒப்பு கொண்டு தற்போது குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் பொய்யாக வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது கணவரின் வீட்டில் இருந்து வெளியே வந்த போது சுமார் 6 மாதம் நிரம்பிய எனது குழந்தையை எனது கணவர் வீட்டிலேயே விட்டு விட்டு வந்து விட்டேன்.

5. நான் நோட்டரி வழக்கறிஞர் முன்னிலையில் வைத்து நானும், எதிர்மனுதாரரும் பிரிந்து விடுவதாகவும், முச்சலிக்காவில் கையெழுத்து இடவில்லை என்றால் குழந்தையை காட்டமாட்டேன் என்று சொன்னதால் நான் கையெழுத்து செய்தேன். நான் மேற்படி முச்சலிக்காவில் கையெழுத்து செய்த பின்பு தான் எனது குழந்தையை அழைத்து வந்தேன்.

**6.** நீதிமன்ற கேள்வி. U/s. 167 இந்திய சாட்சிய சட்டம் : நீங்கள் எதற்காக ஆறுமாத காலம் இருந்த குழந்தையை கணவர் வீட்டில் விட்டு விட்டு வெளியே வந்தீர்கள் என்றால் எனது குழந்தையை அழைத்து சென்றால் எனது கணவர் தற் கொலை செய்து கொள்வதாக மிரட்டினார். அதனால் குழந்தையை விட்டு விட்டு வந்தேன்.

7. நான் எனது குழந்தையை கணவர் வீட்டில் விட்டு விட்டு எனது வீட்டிற்கு வந்த போது எனது அப்பாவும், பெரியப்பாவும் கணவர் வீட்டிற்கு வந்து என்னை அழைத்து வந்தார்கள். எனது கணவர் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டியதால் தான் எனது குழந்தையை கணவர் வீட்டில் விட்டு விட்டு வந்தேன் என்ற விவரத்தை எனது மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

8. எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் HMOP:34/2019 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில் நான் ஆஜரானேன். அந்த வழக்கின் தற்போதைய நிலை குறித்து எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு

நிலுவையில் உள்ளதா அல்லது முடிந்து விட்டதா என்று எனக்கு தெரியாது.

9. எதிர்மனுதாரர் ரூ.30 லட்சம் வைத்து கொண்டு வட்டிக்கு விட்டு மாதம் ரூ.50,000/-ம் ஈட்டி வருவதாக நான் சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பட்டு தறி வைத்துள்ளார். அதற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் வட்டிக்கு விடும் தொழில் செய்யவில்லை என்றாலும், தறி வைத்திருக்கவில்லை என்றாலும் கூலி வேலை செய்கிறார் என்றாலும் சரியல்ல.

10. நான் எதிர்மனுதாரரிடம் சண்டையிட்டு, மனஉளைச்சலை ஏற்படுத்தி அவரிடம் இருந்து தன்னிச்சையாக பிரிந்து வந்து விட்டேன் என்றாலும், ஜீவனாம்சம் பெறுவதற்கு தகுதி இல்லை என்றாலும் சரியல்ல. எனவே இம்மனு தள்ளபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 05.00 மணி,

சாட்சி: சுகுணா

ஓம்/-எஸ். ஷர்மிளா,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.